# மாலை மாற்றம்

நாலு தெருக்களுக்கப்பால் ஒரு வீட்டில் திருமணம் ஒன்று நிகழ்ந்தது. அந்த வைபவத்திற்கு நான் போனேன். அந்த வீட்டாரை அம்மாதான் நன்கு அறிவாள் எனினும் அம்மாவின் பிரதிநிதியாக நானே சென்றேன் கோல மணையிலே அமர்ந்திருக்கும் புதுமண தம்பதியைக் காணும் ஆர்வம் எனக்கு.

தமிழ்நாட்டுத் திருமணம் பார்த்து நெடுநாளாகிவிட்டதனால், லாலி ஊஞ்சல் முதல் எல்லாம் பார்த்து அனுபவிக்க விரும்பினேன். காலையிலேயே மணவீடு போய்ச் சேர்ந்தேன்.

மணமகளின் வீட்டார் பெரும்பாலோர், மாப்பிள்ளையின் காசியாத்திரை கட்டத்திற்குப் போயிருந்தனர். மணமகள் மட்டும் தன் அக்காளுடனும், வேறு ஓரிருவருடனும் இருந்தாள். மணப்பெண்ணுக்கே உரிய ஒருவித மகிழ்ச்சி, கூச்சம், கலக்கம், தயக்கம் எல்லாம் கண்களின் சுழற்சியிலே வீச அந்த இளம்பெண், ஒரு சிறு அறையிலே பதுமைபோல அமர்ந்திருந்தாள். அவளுடைய தமக்கை பூரண கர்ப்பிணியாயிருந்ததனால் வீட்டிலேயே இருந்து என்னையும் என் தங்கைக்கும் நல்வரவு கூறினார்.

ஆனால், நாங்கள் பரிச்சிய மற்றவர்கள் என்ற காரணத்தினால், அதிகம் பேசிக்கொள்ளவில்லை.

கலியாணம் பார்க்கவென்று வந்து கொண்டிருந்தவர்களிலே யாரோ ஏதோ கேட்டார்கள் போலும் - மணமகளின் தமக்கை தங்கம் உற்சாகமுடன் பேசத் தொடங்கினார். "திடுதிப்பென்று நிச்சயமாச்சு. அவசர அவசரமாக ஏற்பாடு ஆச்சு. தந்தியில்தான் நடந்தது கலியாணப் பேச்சு. எப்படியாவது இந்த வருஷம் நடத்திவிடணும் என்று பிடித்த பிடிவாதம் பலிச்சுது," என்று சொன்னார் தங்கம்.

எனக்கு சுவை கூட்டியது சூழ்நிலை. எவனையாவது பிடித்துப் போட்டுக் கலியாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட கட்டாயக் கலியாணமா இது? அல்லது - பெண்ணும் மாப்பிள்ளையுமே, கருத்தொத்து மணம் பேசிக்கொண்டுவிட்டதனால், தாமதத்திற்கு வழியின்றி சடுதியில் நிச்சயமான காதல் மணமா?

எனக்குள்ள பல ஆசைகளுள் ஒன்று காதற் கலியாணம் பார்க்கவேண்டும் என்பது. பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுச் சிறியோர்களால் ஏற்கப்படும் கலியாணங்களிலே, மணமக்கள் மனதுளே மகிழ்ந்தாலும் - அவர்களுடைய பார்வையிலே உறவு இருப்பதில்லை. சிறியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட காதல் மணம் ஒன்றைக் கண்குளிரப் பார்க்கவேண்டும் என்பது என் அவா. இந்தக் கலியாணம் எத்தகையது?

மணமக்கள் மணையிலே அமரும்வரை காத்திருந்து - அவர்களுடைய பார்வையின் மூலம் ஊகம் செய்யலாம். ஆனால் எனக்குப் பொறுமை இல்லை.

தங்கத்துடன் பேச்சுக்கொடுத்து ஏதேனும் அறிய முடியுமோ என எண்ணமிட்டேன்.

பெண்களின் பல இயல்புகளிலே விசேஷ விசித்திரம் இருப்பதாக, ஆண்கள் கூறுவதை, ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். முன்பின் பார்த்தறியாதவரோடு நொடியில் தோழமை பூணும் வழியும் பெண்களுக்குத் தெரியும்; பலநாள் பழகியவரோடு பேச விரும்பாமல் ஒதுங்கிக்கொள்ளவும் தெரியும்.

மேலான உறவு முறை விசாரிப்பதுபோல் தான் தங்கத்துடன் பேச்சுத் துவக்கவில்லை. “வடக்கேயிருக்கிறோம் நாம். தமிழ்க்கலியாணங்களை எங்கே பார்க்க முடிகிறது?" என்னும் ஒரு ஒற்றுமை வினாவுடன் துவங்கினேன். இனிமேல் பேச்சு வளருவதிலே தடையுண்டோ?

இந்த நாளிலே கூட, ஜாதகப்பொருத்தமும், சகுனமும் சௌகரியமும், பெரியோர்களின் கட்டுத்திட்டங்களும் ஒன்றுபட்டு ஒத்துக்கொண்ட பிறகு நான் திருமணங்கள் நடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி நான் பேச விரும்பிய சந்தர்ப்பம் சீக்கிரமே வந்தது.

"கதைகளிலே, கலியாணங்கள், ரொம்ப சுலபமாய் முடிந்துவிடும், அல்லது முறிந்துவிடும். வாழ்க்கையிலே எத்தனை இழுபடுகின்றன, மாமி? எத்தனை யோசனைகள் - எத்தனை தவக்கங்கள்? முதலில் இதைச் சொல்லுங்கள். காதற்கலியாணம் என்று ஏதாவது நடந்து நாம் பார்த்திருக்கிறோமா?" என்று கேட்டு வைத்தேன் பேச்சுப்போக்கிலே.

நான் அணிந்திருந்த பொன்மாலையின் அழகை ரசித்துக்கொண்டேயிருந்த தங்கம் - திடீரென்று ரோசமுற்றது போல் பார்த்தார்.

"ஏன் இல்லை? நான் நிறையப் பார்த்தாகிவிட்டதம்மா - இந்தக் காதலையும் ஊதலையும் - கேட்கிறாயா, சொல்கிறேன்? எங்கள் ஊரில் நடந்தது........"

இன்று நடக்கும் திருமணம் காதல் மணம் அல்ல என்பதை நான் அறிய இன்னும் என்ன தேவை? எனக்குச் சற்று ஏமாற்றம்தான். ‘காதற்கலியாணம்தான் காண முடியாது நமக்கு - காதற் கலியாணக்கதையாவது கேட்டு வைப்போம்!’ என எண்ணியவளாய், “சொல்லுங்கள் மாமி, பேஷாகச் சொல்லுங்கள்," என்றேன்.

எங்கள் அருகிலிருப்பவர்களும் இதைக் கேட்கத் தயாராகிவிட்டனர். மணப்பெண்கூட, தன் பெரிய கருவிழிகளை, எங்கள்பால் திருப்பிவிட்டாள்!

தங்கம் ஆரம்பித்தார்:-

"எங்களுக்கு, 'குவார்டர்ஸ்" பெரிதாகி, ஆபீசை ஒட்டினாற் போலவே தந்திருக்கிறார்கள். மாளிகை மாதிரி பிரும்மாண்டமான வீடு. எங்கள் வீட்டில் மேஜைமேல் வைக்கிற 'ப்ளவர் வாஸ்'க்குக்கூட, ரோஜாப் பூக் - கொத்துத்தான். அத்தனை பூச்செடியும் நான் ஒரு ஆளைப்போட்டு பயிராக்கினேன் !"

ரோஜா அத்தரின் மணம்போல் - உள்ளதை ஆட்கொண்டுவிடும் சக்தியைப் பெற்றுவிட்டது - தங்கத்தின் வர்ணனை.

"தந்தி ஆபீஸ் அல்லவா? பெண்களும் ஆபரேட்டர் வேலைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கே வேலை பார்த்துவந்த பெண்களில் ஒருத்திக்கு ஒரு கிளார்க்கு சிநேகம் - அதுதான், காதல்!" தங்கம் குறும்புச் சிரிப்பு சிரித்தார்!

"ஆபீஸில் இடம் கொஞ்சம் போதவில்லை. மூன்று மாசத்திற்கு எங்கள் வீட்டில் ஒரு பக்கமாக இரண்டு ஹால்களை எடுத்துக்கொள்ளும்படி மேலிடத்து உத்திரவு வந்தது. கொடுத்தோம். அந்த இரண்டு ஹால்களில் 'எக்ஸ்சேஞ்சு' இருந்தது. அந்த ஆபரேடர் இருப்பாள் அங்கே. வேலை நேரம் எத்தனையோ தெரியாது. அவள் எப்பொழுதும் 'போன்' வைத்துக்கொண்டு அவனோடு பேசின மணியம்தான்! சிரிப்பும் கொம்மாளமுமாகப் பேச்சு நடக்கும்போது, கணீர் கணீர் என்று என் காதில் விழாமலிருக்குமா? அந்தப் பக்கமே போகவேண்டாம் என்று நினைப்பேன் - ஆனால் போகாமலிருக்கவும் முடியாது. போவேன். இந்தக் கண்றாவி எல்லாம் காதில் விழும்".

காதல் என்றாலே ஒரு ஆர்வம் தானே மனுஷர்களுக்கு' தங்கத்திற்கு குறுகுறுப்பு இருக்காதா?

"கிளார்க்கோடுதானா பேசுவாள்? அவர்கள் இருவருக்கும் சிநேகம் என்று எப்படித் தெரிந்தது மாமி?" என்று கேட்டேன் நான்.

"அடிக்கடி அவன் வருவான் இந்த எக்ஸ்சேஞ்சுக்கு, போனில் அவனுடைய பெயரை அவள் கூப்பிடுவதுதான் கேட்கிறதே எனக்கு! கதவண்டை நிற்பேன் தினமும். இவர்கள் ஓயாமல் ஒழியாமல் போனில் அரட்டையடிப்பதை ஒரு நாள் இவரிடம் சொன்னேன். இருக்கட்டும், நடக்கட்டும், போகட்டும் என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். எனக்குத்தான் பொறுக்கவேயில்லை. ஒருநாள் இருவரும் மேஜையைச் சுற்றி ஓடிப்பிடித்து விளையாடினார்கள். அட்டகாசம், கும்மாளம்! சினிமாவைப் பார்த்துத்தான் வாழ்க்கையில் கற்றுக்கொள்கிறார்களோ இல்லை வாழ்க்கையில் இருப்பதைப் பார்த்துதான் சினிமா எடுக்கிறார்களோ? அன்றைக்கு இவர்களுடைய விளையாட்டு! . . . வேறு சினிமாவே பார்க்க வேண்டியதில்லை! விஷயம் விபரீதமாகிவிடும் முன்பு அம்பலப்படுத்திவிடவேண்டுமென்பது என துடிப்பு. நன்றாகச் சொல்லிவிட்டேன் இவரிடம்."

கதையின் சுவையான இந்தக் கட்டத்திலே, யாரோ ஒரு பெண் ஓடோடி வந்தாள் - "சுத்துபிடிசாதம் எல்லாம் தயாராய் வைக்கச் சொன்னா அத்தை!" என்று கூறிவிட்டு மீண்டும் ஓடோடி மறைந்தாள். தொலைவில் கொட்டு மேளங் கேட்டது. நான் மணப்பெண்ணைப் பார்த்தேன். சற்று பதட்டப்பட்டவள் போலத்தான் தென்பட்டாள். புடவைத்தலைப்பைச் சரி செய்து கொண்டாள்.

"எழுந்து போகணுமா மாமி, நீங்கள்? கதை முடியவில்லையே?" என்று கேட்டேன்.

"அங்கே எல்லாம் தயாராய்தானிருக்கு - ஆச்சு, கதைக்கென்ன, ஒரே நிமிஷம்!" என்று கூறிவிட்டு தங்கம், அந்தப் பக்கமாகச் சென்ற ஒரு பையனை ஏதோ அலுவலாக அனுப்பி விட்டு, என்பக்கம் திரும்பினார்.

ஒரு நிமிஷம்தானா கதை முடிய? . . . ஆம் - முடிந்துவிடும் கட்டம்தான் என்று தெரிகிறதே!

"ஆச்சா, . . . அவரிடம் சொன்னேனா? - அவருக்கும் சுறுசுறுப்பு வந்தது. அவளுடைய சித்தப்பா, இவரைப்போலவே ஒரு ஆபீஸர், இதே ஆபீஸில். இந்த நெருக்கடியைச் சொல்லிவிட்டு வேண்டியதைச் செய்கிறதுதானே அழகு, சிநேகத்திற்கு?"

"ஆம் ஆம்!" என்று நான் தலையசைத்தேன் - தொலைவில் கேட்ட மேளவாத்தியமும் கொட்டிற்று.

"கடைசியில் சொல்லிவிட்டார். நானும் போய்ச்சொன்னேன் வீட்டுப் பெண்களிடம் - பார்த்துக்கொள் - அடுத்த வாரமே கலியாணம் நிச்சயமாகி நடந்துமாயிற்று. அவர்களுக்கு சந்தோஷமான சந்தோஷம் - இந்த மட்டும் வந்து சொன்னோமே என்று."

"நடந்துவிட்டதா, அத்தனை சீக்கிரம்?" என மலைத்துப்போனேன்.

"உம் - நடந்துவிட்டது அடுத்த வாரமே! ஒரு பெண் அநியாயமாகக் கெட்டுப்போகாமல் காப்பாற்றினோமே என்று எங்களுக்கும் பகு திருப்தி. நாம் செய்கிற ஒரு காரியத்தின் பலன்தான் எதுவும் நடக்கும் என்று வச்சுக்கோயேன், அதுவும் ஒரு கலியாணம் பண்ணி வைக்கிற புண்ணியமே பலன்!..... இத்தனை வருஷமாய் என் தங்கைக்கு வரன் திகையவில்லை. கலியாணம் நடக்கவில்லை. இப்போ பாரேன் - அது நடந்து ஆறுமாதம்தான் ஆச்சு - இந்த வருஷம் இது நடக்கிறது!" ம்ம் என்று தங்கம் அகமும் முகமும் மலரப் பகர்ந்தார்.

மணப்பெண்ணைப் பார்த்தேன். கண்களிலே ஒரு பரிதாபம் புலனாயிற்று. காத்துக் காத்துக் கிடைத்த கணவன் தான் என்பதிலே ஒரு சோகம்தான் இருக்கும் போலும்!

தங்கத்தின் மருமகள் மீண்டும் ஓடோடி வந்து, "ஆரத்தியெல்லாம் "ரெடி"யாயிருக்கான்னு பார்க்கச் சொன்னா, அத்தை!" என்று கூவிவிட்டுப் போனாள்.

"பாவம் - உங்கள் வேலைகளைத் தடைப்படுத்திக்கொண்டு, கலியாண வீட்டில் கதை சொல்லும்படி கேட்கிறேன் உங்களை!" என அங்கலாய்த்தேன் நான்.

"எல்லா வேலையும் தயாராய்த்தான் இருக்கு - அம்மா பயப்படுவாள் இப்படித்தான்!.... நான் சொல்லிவிட்டுப் போகறேன் முழுக்க - முக்கியமாக இதற்காகத்தானே கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்?" என்று தங்கம் நிதானமுடன் சொல்லவே, நான் வியப்புடன் "கதை முடியவில்லை?" என வினவினேன்.

மணப்பெண் கூட பார்வையைக் கூர்மையாக்கிக்கொண்டாள்.

"ஆமாம், கேளு. அந்தப் பெண் இப்பொழுது சினிமாவில் சேர்ந்துவிட்டதாம் புருஷனோடு வாழாமல்! இப்பேர்ப்பட்ட ஓடுகாலிப் பெண்களிடம் தான் காதல் கீதல் எல்லாம் உண்டாகும் போலிருக்கு என்று நமக்குத் தோன்றிவிடுகிறதா இல்லையா சொல்லு பார்ப்போம்!" என்று கேட்டார் தங்கம்.

அந்த முன்பின் முகமறியாப் பெண்ணின்மீது நானும் ஆத்திரமடைந்தேன். பாவிப்பெண்! ஏன் இப்படி வாழ்வைச் சிதைத்துக்கொள்ள வேண்டும்? இவளைப் போன்றவர்களாலேதான் அன்றோ காதல் மதிப்பிழக்கிறது?

"சில பெண்கள் தான் அப்படியிருக்கலாம் மாமி - அது காதல் இல்லை" என்று ஏதோ பதிலளித்தேன்.

“அதென்னமோ இப்பொழுது அந்தப் பெண் சினிமாவில் நடிக்கக் கிளம்பிவிட்டது துணிந்த கட்டை!" என்று அங்கலாய்த்தார் தங்கம்.

நல்ல அழகாக்கும் அவள்? என்ன பெயர் மாமி? சினிமாவில் எப்போதாவது பார்த்தால் தெரிந்துகொள்ளலாமே?"

"பேர் . . . சசிகலா. இப்பொழுது என கலாவோ, வேஷமோ? யாருக்குப் பிடிக்கிறது. இதையெல்லாம் நினைவு வைத்துக்கொண்டு அவதிப்பட? புருஷன் ஒரு நல்ல உத்தியோகஸ்தன்; அறுநூறு போலிருக்கு சம்பளம் - அவளுக்குப் புத்தி இப்படிப் போச்சே!" என்று பரிதபித்தார் தங்கம்.

திடுக்கிட்டது நான் தான். உத்தியோகஸ்தனா, அந்த காதற் கணவன்? கிளார்க்கு அல்லவா?

“இல்லையே.... ஒரு மந்திரியின் கீழே . . . ” அவளுடைய சிற்றப்பாவின் சிபாரிசுகளால் உயர்ந்ததோ பதவி?

"இல்லையே - முதலிலேயே இதே நிலைதான் - தடபுடல் கலியாணம். மாப்பிள்ளை ஆகாய விமானத்திலே வந்திறங்கினான்."

ஏன் சந்தேகம் முறுக்கேறிக்கொண்டு என் மென்னியை இறுக்கிவிட்டது. அவளை - சசிகலாவை - திருமணம் செய்வித்தது யாருக்கு? காதலனுக்கு அல்லவா?

“இல்லையே! அவனை உடனே டிரான்ஸ்பர் பண்ணிவிட்டு, இவளை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, இவள் சிற்றப்பா, மறுவாரமே ஒருவனை நிச்சயம் பண்ணிவிட்டாரே!இவள் மஹாராஷ்டிராப் பெண் - கிளார்க்குக்கு ஒரு வங்காளி - எப்படி செய்கிறது?" தாழம்பூப்புதருக்கருகே நாகம் கண்டாற் போன்று பதறியது உள்ளம். பாவிப்பெண்ணே! சசிகலாவின் வாழ்வை நீ ஏனடி பாழக்கினாய்? உன் போன்றவர்கள் இருக்கும் பொழுது காதல் தழைக்குமா? மதிப்புப் பெறுமா? நீ செய்தது உதவியா? பாதகம்! தங்கம்! நீ ஒரு பாறாங்கல்! சசிகலா பாவம், உன்னாலேதான் - யாருக்கும் உரிமையற்றவளாகப்போய்

யாவருக்கும் உடமையானவளைப் போலத் தோன்றுகிறாள்! அவள் நல்லவள்; பொல்லாதவள் நீதான்!

தங்கத்தின் முகத்தை நிமிர்த்துப் பிடித்து உலுக்கிக் கதறவேண்டும் போல ஆவேசம் பொங்கிற்று எனக்கு. மணமகள் கூடத் தன் அக்காவைப் பார்த்த பார்வையிலே கசப்பு இருந்தது. புருவங்கள் சுருங்கி, கண்களிலே வினாக்குறி தோன்றியது.

"ஏதோ, அப்பொழுது 'எக்ஸ்சேஞ்சு' பக்கத்திலேயே இருந்தது கவனிக்க முடிந்தது - இன்னும் எத்தனை அக்கிரமம் நடக்கிறதோ! நாம் என்ன செய்ய முடிகிறது? இப்போ கூப்பிட்ட குரலுக்கு உதவி செய்யலாம் என்றால்கூட இந்த உடம்புடன் முடியவில்லை!" என்று குண்டு மல்லிகைப் பற்களைத் திறந்துகாட்டி, முறுவலித்தவாறே சிரமமுடன் எழுந்து சென்றார். நிறைசூலியான தங்கம்.

நாகஸ்வர இசையும், மேளவாத்தியமும் அருகில் வந்துவிட்டன - காதற் கதையும் முடிந்தது! . . . எழுந்து வாசற்புறம் செல்லலானோம். மணமகள் - அந்தச் சிறு அறையிலேயே, பெட்டியின் மீதே அமர்ந்திருந்தாள். கரங்களைக் கழுத்தருகே குவித்துக் கொண்டிருந்தாள். இறைவனை என்ன இறைஞ்சினாளோ? புது வாழ்வு புகும்பொழுது புலர்ந்துவிட்டதே!

வாசலிலே - வாழையும் _நொங்கும் பசுமையும் அழகும் நிறைந்த - பந்தலின் கீழே மாப்பிள்ளை காசியாத்திரைக் கோலமுடன் வந்து நின்றார். ஆதரவளிக்க விரும்புகிறவர்கள், பையன் லட்சணம் என்று சொல்லிக் கொள்ளலாம்! கழுத்திலே தாலி ஏற இனியும் தாமதம் வேண்டாம் என்று தான், அழகியான மணமகள் இந்த வரனை ஏற்றிருப்பாளோ?

"பெண் வரட்டும்" என்னும் அவசர அழைப்புகளுக்கிடையில் மணமகள், குனிந்த தலை நிமிராமல் நடந்து வந்தாள், மாலைமாற்றம் இடத்திற்கு வந்த பிறகு தலை நிமிர்ந்து அருகிலிருப்போரை கூச்சமின்றி ஏறிட்டுப் பார்த்தாள்!

"மாலை மாற்றலாம்" என்று உத்திரவு பிறந்தது ஒரு பெரியவரிடமிருந்து.

மணமகன் மணங்கமழும் அழகிய மல்லிகை மாலையைக் கையில் ஏந்தி மணமகளை நோக்கிப் புறப்பட்டான்.

"ஐயோ!"

யார் அது?.... இந்தச் சுபவேளையிலே?

"என்னம்மா? நீயா?"

"ஐயையோ!.... ஆமாம்!.... பாம்பு!" "எங்கே! எங்கே! எங்கே! எங்கே!

"அதோ!"

"எங்கேம்மா?"

"அதோதோ - அவர் கையிலே!"

மணமகன் பீதியினால் மாலையை நழுவவிட்டார்! "அதோ - பாம்புதான்! நெறியறது! ஐயோ!" மணமகள் கண்களை இரண்டு கைகளாலே மூடிக்கொண்டு, ஊஞ்சலில் உட்கார்ந்துவிட்டாள்.

"மாலையம்மா!"

"கண்ணைத்திறந்து பாரு இப்போ! பாரேன்!" "உம்..... இப்போ மாலையைத்தான் தெரியறது!"

"அனாவசியமாய் பயப்படாதேம்மா! அசடாட்டம்.... இந்தா - வா, எழுந்திரு".

"சார் - மாலையை எடுத்துக்கொள்ளுங்கள் - போடுங்கள்!"

தயங்கியவாறு மாலையை எடுத்தார் மணமகன். "ஐயையோ - அது பாம்புதான்!.... வேண்டாமே! ஐயோ, பயமாயிருக்கே....

மீண்டும் மாலை கீழே விழுந்துவிட்டது. எல்லோரும் செயலற்றுப் போனார்கள்.

மாப்பிள்ளை நகர்ந்துகொண்டார் - வழியும் வியர்வையைத் துடைத்துக்கொண்டார். "சார் வேண்டாம் எனக்கு இஷ்டமில்லை - இப்படியெல்லாம் அபசகுணம் நடக்கும்பொழுது - போறேன்".

யாரும் தடைசொல்ல முடியாதபடியாயிற்று - தடைசொன்ன சிலர் தழைந்து போனார்கள்.

"வேறொன்றுமில்லை - ஏதோ காத்துப்பட்டிருக்கு!.... எந்த சாமி குற்றமோ?" இப்படி பலரகப் பேச்சு.

தங்கம் சொன்ன காதற் கதையின் காத்துப்பட்டிருக்குமோ மணமகளுக்கு? ஆம் - காதில்பட்டது!

தங்கம் சசிகலாவிற்று இழைத்துவிட்ட தீங்கு, இப்பொழுது நாகம் போல வந்து பழி வாங்கியதோ? செயலுக்குத் தகுந்த பலன் என்றாளே தங்கம்?

பலவித சிந்தனைகளுடன் நான், மணம் நடவாத வீட்டை விட்டு வெளிக்கிளம்பினேன்.

இதே மணமகளின் காதற் மணம் விரைவில் நிகழுமோ என்று நான் கற்பனை செய்வதை - அறியாத என் தங்கை, "போனாப் போறது போ, அக்கா! இது நடக்காததனால் வருத்தப்படமாட்டாள் ஹேமா. அவ்வளவாக இஷ்டப்படவில்லை போல்தான் பேசினாளாம்" என்று சொல்லிக்கொண்டு வந்தாள்.

மணவீட்டிலே, பூமாலைகளும், பூப்பந்துகளும் அலங்கி மலங்கிப்போய் வீணாகிக் கிடந்தன. என் சிந்தனை அரும்புகளோ தாமாகவே மாலை புனைந்து கொண்டன. இந்த மாலைகள் யாருடைய வெற்றிக்கு? என் வெற்றிக்கா? அல்லது இன்று மணமகளாக சிறிது நேரம் விளங்கிய கெட்டிக்காரிக்கா?

**********

(சுதேசமித்திரன், ஆகஸ்ட் 26, 1951)